DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 123/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.யோகினி |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.சீராளன் |
| Village | : | ஆலம்பாடி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, A2, A3, A4 are present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.06.2024

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருமணம் முடிந்து உதயக்குடியில் எனது கணவருடன் வாழ்ந்து வருகிறேன். திருமணத்திற்கு முன்பு ஆலம்பாடியில் எனது

பெற்றோர்களுடன் வசித்து வந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. கடந்த 09.09.2017 ம் தேதி எங்கள் வீட்டின் முன்பு உள்ள முள்ளுககம்பி வேலியை எதிரிகள் பூரணம் மற்றும் சண்முகபிரியா ஆகியோர்கள் தீ வைத்ததில் வேலிக்கம்பி முழுவதும் எரிந்து விட்டது அப்போது எனது அப்பா வீட்டில் இல்லை.

3. மறுநாள் காலையில் இதுபற்றி எனது அப்பா எதிரிகளிடம் முள்ளுகம்பி வேலியில் தீ வைத்தது பற்றி கேட்டபோது எதிரிகள் கெட்ட கெட்ட வார்த்தைகளால் எனது அப்பாவை தவறாக பேசினார்கள். எதிரி கார்த்தி அருவாளைக் கொண்டு என்னையும் எனது அம்மாவையும் தாக்கியதில்எனது இடது மேல் கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது (சாட்சி காயத்தழும்பை காட்டி சாட்சியமளிக்கிறார்)

4. எனது அம்மாவிற்கு வலதுபக்க மேல்கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. எங்களையும் கெட்ட வார்த்தைகளால் தவறாக பேசினார்கள். பின்னர் இது சம்பந்தமாக எனது தகப்பனார் காவல் நிலையம் சென்று புகார் அளித்த விவரம் எனக்கு தெரியும். எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருவாடானை அரசு மருத்துவமனையில் வந்து சிகிச்சை எடுத்துக் கொண்டோம். என்னையும் போலிசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. போலிசார் என்னை 10.09.2017 ம் தேதி விசாரித்தார்கள். காலை 11.00 மணியளவில் மருத்தவமைனையில் வைத்து என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. நான் தற்போது முதல் விசாரணையில்

சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

2. நான் B.A. தமிழ் முடித்துள்ளேன். நான் பிறந்த தேதி 01.07.2002 ஆகும். சம்பவம் நடந்தபோது நான் இளவர் என்றால் சரிதான். என்னை விசாரித்த போலிசார் பெயர் மற்றும் அவரது பதவி எனக்கு தெரியாது. எந்த போலிசார் என்னை விசாரித்தார்கள்என்று எனக்கு தெரியாது ஆனால் ஒரு போலிசார் விசாரித்தார்கள்.

3. சம்பவத்தின்போது நான் வீட்டின் பின்னேயுள்ள கொட்டகை வீட்டில் இருந்தேன். அ.சா.1 அளித்த புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது நான் மருத்துவமனையில் இருந்தேன்.

4. எங்களுக்கும் எதிரிகளுக்கும் பாதை சம்பந்தமாக பிரச்சனை உள்ளது தெரியுமா என்றால் அதெல்லாம் இல்லை. எதிரிகளை எனது தகப்பனார் தாக்கி அதன்பேரில் எனது தகப்பனார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் வழக்கு உள்ளது ஆனால் எனது தகப்பனார் ஏதும் செய்யவில்லை.

5. எனக்கு சிசிச்சை அளித்த மருத்துவரிடம் யார் தாக்கினார்கள் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பெயர் சொன்னேன். எதிரி தாக்க பயன்படுத்திய அருவாளை கைப்பற்றி போலிசாரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் நான் மருத்துவமனை சென்றுவிட்டேன்.

6. எங்கள் வீட்டை சுற்றி பக்கத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்தால் உண்மை நிலவரம்

தெரியவரும் என்றால் சரிதான்.

7. எனக்கு வேறுவிதமாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது அ.சா.1 பொய் புகார் அளித்துள்ளார் என்றால் எதிரி கார்த்திக் தன் அருவாளால் என்னை வெட்டினார். என்னை வெட்ட பயன்படுத்திய அருவாளின் நீளத்தை சொன்னீர்களா என்றால் சொன்னேன்.

8. எங்களுக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது அ.சா.1 பொய்யாக புகார் அளித்து அதன்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் இல்லை. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 123/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.துரைக்கண்ணன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.துரைச்சாமி |
| Village | : | ஆலம்பாடி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, A2, A3, A4 are present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.06.2024

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் ஆலம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. பார்வை

மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை

(சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அவ்வாறு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. கடந்த 11.09.2017 ம் தேதி காலை 07.30 மணியளவில் குற்ற எண் 256/2017 வழக்கின் சம்பவ இடத்தை திருவாடானை காவல் உதவி ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை எனது மற்றும் கருப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் தயார் செய்தார் என்றால் சரியல்ல

2. மேற்படி பார்வை மகஜரில் நானும், கருப்பையாவும்ம் சாட்சி கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல